**2026 ஏப்ரல் மாதம் 18– ஆம் தேதி சனிக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 19/2024**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 19/2024 | பெயர்: சுடலை வேல்முருகையா<br>த/பெ.சுப்பையா | PW1 | 18.04.2026 |

**சாட்சி M.P.28/2026 மனு 08.04.2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

20.12.2024, 01.02.2025 ஆகிய தேதிகளில் 2 முதல் 8 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 1 வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொண்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 1, 2 மற்றும் 8 எதிரிகள் தேனி மாவட்ட எல்கைக்குள் இல்லாமல் மதுரை மாவட்ட எல்கைக்குள் தான் இருந்தார்கள் என்று தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.04.2014 ம் தேதி இயக்குநர் அலுவலக நடவடிக்கையின்படி 01.04.2013 ம் தேதி தயார் செய்யப்பட்ட ஆணை 1 வது எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.91 ன்படி 01.04.2013 ம் தேதி ஆணை அனுப்பப்பட்டதாக மட்டும் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.91 ஆவணமானது 20.01.2014 ல் தயாரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. அ.சா.ஆ.92–ல் தனிப்புகார் தாக்கல் செய்வதற்காக இயக்குநர் அலுவலகத்தில் அனுமதி பெறுவதற்காக இரண்டு கடிதங்கள் மட்டுமே பார்வையில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. 25.10.2013 ம் தேதி 1 வது எதிரி நிறுவனத்தில் மருந்துப் பொருட்களை எடுத்ததாக கூறியுள்ள நிலையில், அது சம்பந்தமாக சட்டப்படியான ஆவணங்களோ, படிவங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. அ.சா.ஆ.76–ல் கைப்பற்றப்பட்ட மருந்துகள் சம்பந்தமாக அறிக்கை சுமார் ஒரு வருடம் பின்னிட்டு 18.09.2014 ம் தேதி தயார் செய்யப்பட்டது என்றால் தவறு. 25.10.2013 ம் தேதியிட்ட படிவம் 13 மற்றும் மருந்து பொருட்கள் எந்த தேதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டது என்பது குறித்து எந்த குறிப்புகளும் இல்லை என்றால் தவறு. முறையான மருந்து மாதிரி பகுப்பாய்விற்கு அனுப்பாத காரணத்தினால்

மேற்படி பகுப்பாய்வு அறிக்கை உண்மையான தகவலை கொடுக்காது என்றால் சரியல்ல.

3. சுமார் ஒரு வருடத்திற்கு பின்னிட்டு சரியாக பராமரிக்கப்படாத மாதிரிகளை பகுப்பாய்விற்கு அனுப்பியது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. முறையான சீலிடப்பட்ட மருந்து பொருட்களை உரிய வழிமுறைகளை பின்பற்றி மேற்படி பகுப்பாய்வு செய்வதற்கு அனுப்பாத காரணத்தினால் மேற்படி மருந்துகள் பருவநிலை மாற்றம் மற்றும் முறையான பராமிப்பு இல்லாத காரணத்தினால் பகுப்பாய்விற்கு உகந்த மருந்து மாதிரியாக கருத முடியாது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.92 –ன் பார்வையில் கண்ட இரண்டு கடிதங்களை தவிர ஏனைய கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் சட்டப்படியான படிவங்கள், குறிப்பு அறிவிக்கைகள் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றை சரியாக பரிசீலனை செய்யாமல் வழக்கு தொடர்வதற்கு அனுமதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

4. மேற்படி மருந்து மாதிரியை பகுப்பாய்வு செய்வதற்கு நல்ல நிலையில் பெறப்பட்டது என்றோ, சூரிய ஒளியில் படாமல் இருந்ததாகவோ, மேற்படி மருந்து மாதிரியில் காட்டப்பட்டுள்ளப்படி பத்திரமாக வைப்பீடு செய்யப்பட்டு, பகுப்பாய்வு நடைபெறும்வரை உரிய முறையில் பராமரிக்கப்பட்டது என்றோ எந்தவொரு விபரமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.04.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.18 17:24:25 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.04.2026